திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரிசனங்களல்லாத பெண்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யில் தவறி, செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களை நடைமுறையில் எடுப்பது கிடையாது. 'பின்தங்கியிருக்கக்கூடிய இனத்'தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில், அந்தப் பெண்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யில் தவறியிருந்தாலும் அவர்களை ஆசிரியர் பயிற்சிக்கு எடுத்துக்கொள்வதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, போதுமான அளவுக்கு விண்ணப்பங்கள் வராதிருந்த நிலைமை சில பல ஆண்டுகளுக்கு முன்னால் இருந்திருக்கலாம். இப்போது 250 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியவர்களும் இருக்கிறார்கள். அரிசனங்களைப் பொறுத்த வரையில் 16 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அரிசனப் பெண்களிலும் கூட 350 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கக்கூடிய பெண்கள் இருக்கிறார்கள். ஆகவே, விதிகளைத் தளர்த்தி குறைந்த எண்ணிக்கையுடையவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. மேலும், குறிப்பிட்ட அளவிற்கு மாணவர்கள் யாரும் சேராமல் இருந்தால், அப்போது குறைந்த மதிப்பெண்களையுடையவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். உறுப்பினர் அவர்கள் கூறுகிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 350, 400 என்று மதிப்பெண்கள் வாங்கியவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் விதிகளைத் தளர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர்களின் வைப்பு நிதி

*** 271 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆசிரியரின் வைப்பு நிதித் தொகையில் (P. F.) அரசின் பங்கு எந்த அளவில் எவ்வாறு இணைக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர் வருங்கால வைப்புநிதிக்கு தொகை செலுத்துபவர், அவருடைய சம்பளத்தின் 6 சதவீதத்தைச் செலுத்த வேண்டும். பள்ளி நிர்வாகிகள் 3 சதவீதமும் அரசு 3 சதவீதமும் உதவித்தொகை வழங்கும். பள்ளி நிர்வாகிகளின் பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டுள்ளதால் 6 சதவீத உதவித் தொகையையும் அரசு வழங்கும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறைப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு நிர்வாகத்தினர் கொடுத்துவரும் 3 விழுக்காடு தொகையினையும் அரசினரே ஏற்றுக்கொள்ள முன்வந்தால் நலமாக இருக்கும். அப்படி அரசினரே ஏற்றுக்கொள்ள முன் வருவார்களா ?

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் விடையிலேயே இதைக் குறிப்பிட்டேன். இப்போது இலவசக் கல்வி புகுத்தப்பட்டதால், தனியார் பள்ளி நிர்வாகிகள் செலுத்த வேண்டிய 3 சதவீதத்தையும் சேர்த்து 6 சதவீதத்தை அரசினரே செலுத்துகின்றனர்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, ஆசிரியர் வைப்பு நிதித் தொகையிலிருந்து, அவர்களுக்கு 50 சதவீதத்திற்கு மேல் கடன் உதவி செய்யலாம் என்று அரசு திட்டமிடுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அளவிற்குத் தொகை சேர்ந்த பிறகு குறிப்பிட்ட சதவீத அளவு கடன் உதவி பெறலாம் என்றிருக்கிறது. எவ்வளவு சதவீதம் கடன்பெறலாம் என்ற குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. வைப்பு நிதியிலிருந்து அவர்களுக்குக் கடன் தொகை கொடுக்கின்ற முயற்சி இருந்து வருகிறது.

Pay of teachers in Government Colleges.

* 272. *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether all the teachers both permanent and temporary in the Government Pre-University Colleges in the State are being paid the scale of pay as recommended by the University Grants Commission?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

More Polytechnics for Tamil Nadu.

* 273. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Htalth be pleased to state—

(*a*) whether the Government propose to start two more Polytechnics in the State from the next academic year (1969-70); and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன். (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கிடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, was there not a notification in the Press by the Technical Education Department that they were thinking in terms of floating two more Polytechnics in our State? மு.ப. 9–30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1969-70-ல் தொழில் நுட்பப் பள்ளி திறக்கப்படுவதாக இல்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 6 தொழில் நுட்பப் பள்ளிகளிலும் 622 மாணவர்கள் இருந்தனர். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 35 தொழில் நுட்பப் பள்ளிகள் இருந்தன. ஆண்டு ஒன்றுக்கு 4,800 மாணவர்கள் வீதம் பயிற்சி பெற்று வந்தனர்.